# திறவுகோல்

2057
சித்திரை
மாத இதழ்



இனிய
**தமிழ்**
**புத்தாண்டு**
நல்வாழ்த்துகள்!

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.


குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# இதயத்தைத் தாக்கும் அக்னிச் சொற்களின் பவனி...




தனது காதலிக்கு நினைவுப் பரிசாக நூலை வழங்கி தனது திருமணத்தன்று அதை வெளியிட்ட தம்பி இம்ரான் அவர்களுக்கு தமிழ் கூறும் நல் உலகத்தின் சார்பில் வரவேற்பு.

சமூக வாழ்வின் துயரத்தையும் அவை எடுத்த இயம்பும் அவலத்தையும் கண்டு கொண்டு அறத்தை துணை கொண்டு கதைகளாகவும் கவிதைகளாகவும் வெளிப்படுத்தும் இம்ரான் அவர்களின் அடுத்த படைப்பு ஏதேன் நகரம்.

அளவெடுத்துத் தைத்த சட்டை ஆளுக்கு அழகை மெருகூட்டுவதைப் போல சொற்களின் குவியலுக்குள் தேர்ந்தெடுத்த சொற்களில் விளையாடும் கவித்துவம் நூல் முழுக்க எதிரொலிக்கிறது. சமகால அரசியல் நிகழ்வுகளையும் அவற்றின் வழியே அனுபவித்த எளிய மக்களின் வாழ்வியலையும் மிகச் சிறந்த சொற்களில் பேசிச் செல்வது பெருவியப்பு.

குடிமக்களின் வாழ்வியலை வளப்படுத்தி மேம்படுத்த துணை நிற்க வேண்டிய அரசியலும் அரசு எந்திரமும் இன்று எப்படி எல்லாம் பாழ்பட்டு நிற்கிறது என்பதையும் அதன் வழியே மக்களின் துயரங்களின் நீளத்தையும் நகைச்சுவையோடும் பகடித்தனத்தில் பதைப்புகளோடும் வெளிப்படுத்தும் இம்ரனின் நம்பிக்கை எல்லா மக்களிடமும் அன்பை விதைக்க வேண்டும் என்பதே.

பிறப்பும் வாழ்வும் இறப்பும் என மனிதர்கள் பத்தோடு பதினொன்றாக மறைந்து போவதில் எவ்வித அடையாளமும் வெளிப்படப் போவதில்லை. ஒரு சராசரி மனிதனாக தன்னை பூமிக்கு ஒப்படைக்க என்னாமல் எண்ணங்களின் வழியே வாசிப்பவரின் சிந்தைக்குள் ஏதோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் மானுடனாக தன்னை அடையாளப்படுத்தும் இம்ரானின் முயற்சியும் பயிற்சியும் புதுப்புது கவிதைச் சொற்களை அவருக்கு உருவாக்கித் தருகின்றன.

## பயணம்

ஏதோ உணர்வின் பொருத்தமின்மையால்
கழன்றவிட்ட
தூக்கத்திற்கு பதிலாக
எதையும் பூட்ட முடிவதில்லை இரவின் பயணத்தில்...

இரவின் பயணம் எப்போதும் எல்லோருக்கும் ஒரே மாதிரியான அனுபவத்தை தந்துவிடப் போவதில்லை இங்கே இரவு இருளையும் குறிக்கிறது எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையையும் குறிக்கிறது. நினைவுகளின் பயணங்களுக்குள் மனிதன் நடத்தும் ஊர்வலமே வாழ்வின் பெரும்பகுதியை அடைத்துக் கொள்கிறது எனில் இரவுகள் அவனை எப்படியெல்லாம் அலைக்கழிக்கும் என்பதையும் இக்கவிதை வெளிப்படுத்தி விடுகிறது.

"பரபரப்பான விளம்பரத்தின் நடுவே
முப்பது வினாடி இடைவேளை
சுதந்திர தின வாழ்த்துக்கள்

இக்கவிதையின் வழியாக உண்மையான தேசபக்தனின் மனநிலை வெளிப்படுகிறது. பகடித்தனமும் அதில் ஒளிந்திருக்கும் தேசப்பற்றும் அரசியல்வாதிகளையும் மக்களின் அதீத நுகர்வு கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தி விடுகிறது. அறிவியல் கருவிகளும் அவற்றின் வழியே மக்களின் மனநிலை சீர்கேடும் தேசத்தின் மீதான பற்றையும் இக்கவிதை வெளிப்படுத்தி விடுகிறது.

## தேர்தல்

கால்கள் வளர்ந்து விட்டன செருப்பை மாற்றியாக வேண்டும்
ராமன் நாடு
திரும்புகிறான்...

மக்களை அடிமைப்படுத்தும் இன்றைய அரசியல்வாதிகளின் மனநிலையை சாடும் இந்த கவிதை தேர்தலில் போக்கையும் வெளிப்படுத்தி விடுகிறது. அதிகாரமும் பண பலமும் ஒருங்கிணைந்து இன்றைய தேர்தலை மக்களிடமிருந்து பிரித்துவிட்டு கட்சிகளுக்கான ஆட்சியாக ஜனநாயகத்தை மாற்றி விடுகிறது. இன்றைய சூழலில் ராமன் நாடு திரும்பினாலும் வளர்ந்து விட்ட கால்கள் எதை நோக்கி திரும்பும் என்பதை தேர்தல்கள் தீர்மானிக்கப் போவதில்லை அதை நடத்தும் கட்சிகளே ராமனின் மனதை அலையவிடப் போகின்றன.

## நந்தனை எரித்த நெருப்ப

புளிய மரத்தின் ஆணிகளில் அவன் நரம்புகள்
உராய்ந்து கிழிகின்றன தண்டவாளங்களில்
ஊரைக் கடக்கும் ரயில்கள் அவன் ரத்தத்தையும்
இழுத்துச் செல்கின்றன
எரியும் அவன் பிண்டத்திலிருந்தே

அரிவாள்கள் காய்ச்சப்பட அணைக்கப்படாமலேயே இருக்கிறது இன்னமும் நந்தனை எரித்த நெருப்பு...

சிறுபான்மை மக்களும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரும் இன்றைக்கும் விடுதலை வாங்கி 75 ஆண்டுகள் நிறைவடைந்தும் வஞ்சிக்கப்படும் சூழல் நிலவி வருவதை நந்தனை எரித்த நெருப்பு வெளிச்சமிடுகிறது. இனமும் மதமும் சாதியும் எவ்விதமான தாக்கத்தை மனித மனங்களுக்குள் ஏற்படுத்தி இன்னும் அணைக்க முடியாத நெருப்பை பற்ற வைக்கின்றன என்பதை இந்த கவிதை வாசிக்கும் நமக்குள் பெரும் அதிர்வை ஏற்படுத்துகிறது.

## கடவுள்

அறுத்தவைக்கெல்லாம்
அவன் காரணமாகிறான் பொய்த்தவைக்கெல்லாம்
நான்
பொறுப்பாளியாகிறேன்...

இங்கே கடவுள் தனது இருப்பை வெளிப்படுத்தும் அதேசமயம் இதை மனிதனுக்கு பொருத்திப் பார்க்கும்போது வெற்றியின் பக்கம் கடவுளையும் தோல்வியின் பக்கம் மனித செயல்பாடுகளையும் ஒப்பிட்டு பார்க்கும் மனநிலை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

## வீரம்

குகைக்குள்
சுருண்டு கிடக்கின்றன
நரிகள்
ஒழுகும் எச்சிலில்
புலிக்கறி வீச்சம்...

சுருண்டு கிடக்கும் நரிகளுக்குள் இன்னும் புலிக்கறியின் மீதான ஆசை ஒழியவே இல்லை. ஆனாலும் புலிகள் தம்மை உணரும் காலம் வரும்போது குகையின் வாசல் நரிகளுக்கு இல்லாமலேயே போய்விடும் என்பதை காலம் உணர்த்தும்.

## சிரிப்பு

வண்ணமயமாய் மின்னுகிறது
ஆலயங்கள்
இன்னுமா இவர்கள் காணவில்லை
இறைவனை ஏழையின் சிரிப்பில்...

ஏழைகளை இன்னும் ஏழைகளாகவே வைத்திருப்பதன் நோக்கமே அரசியல்வாதிகளில் அடிப்படையாக அமைந்துவிடுகிறது பிறகு ஆலயங்களை அடுக்கிக் கொண்டே போனாலும் ஏழைகளின் துயரங்கள் தீரப் போவதில்லை.

இன்றைய மனிதர்களின் வேகமான ஓட்டத்தில் நின்று நிதானித்து எதையும் அனுபவிக்க முடியாத சூழலில் பெருகிவரும் நுகர்வுக் கலாச்சாரமும் மக்களின் அன்றாட முகங்களை மாற்றி விடுகின்றன. பொதுச்சொத்துக்கள் மீதான மக்களின் கவனிப்பின்மை அலட்சியமான மனோபாவம் சகிப்புத்தன்மையை தொலைத்தல் அன்பு கருணை இவற்றை மறந்து விடுதல் போன்ற இன்றைய தலைமுறை செயல்பாடுகளை கோடிட்டு காட்டும் கவிதைகளில் விவசாய மக்களின் போராட்டங்களையும் மேக் இன இந்தியா போன்ற முன்னெடுப்புகளின் செயல்பாடுகளையும் விவரிக்கும் கவிதைகள் இன்னும் உயர்ந்து செழித்து வளர மொழி இவருக்கு வசப்பட்டு துணை நிற்கட்டும்.

## ஏதேன் நகரம் (கவிதைத் தொகுப்பு)

படைப்பாளி: அ.இம்ரான் ஹறக்,

வெளியீடு: யாப்பு, பக்கங்கள்: 64 / விலை: ரூ.60/-
முதல் பதிப்பு நவம்பர் 2025



- இளையவன் சிவா, கைபேசி: 9965359130



ஓவியம்:
**மா. நிரல்யா,**
**மூன்றாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**

# அவளின் உலகம்

கவிதைகளை
அவள் மீண்டும் காதலிக்கத்
தொடங்கியிருக்கிறாள்...

இந்த முறை,
கொஞ்சம் பயத்துடன்...

கொஞ்சம் உடைந்த மனதுடன்...

தொலைந்துபோன அவளின் கவிதைகள்,
அவளைப் போலவே
யாராலும் முழுமையாகப் புரிந்து
கொள்ள முடியாதவையாகி விட்டன...

சில நேரங்களில்,
தன்னை தானே தேடி
அந்த வரிகளில் அவள் தடுமாறுகிறாள்...

இப்போது,
சிதறிக் கிடந்த அந்தக் கவிதைத்
துண்டுகளை
ஒன்றொன்றாக சேர்த்து
மீண்டும் ஒரு உலகம்
கட்டிக்கொண்டிருக்கிறாள்...

ஒரு காலத்தில்,
வலி வந்தால் கவிதை...
மகிழ்ச்சி வந்தாலும் கவிதை...

மூச்சே கூட கவிதையாய் இருந்தது...
ஆனால் ஒரு நாள் -
அதே கவிதைகளை விட்டு விலகி

மௌனத்தோடு வாழ
கற்றுக்கொண்டாள்...

அந்த மௌனம்,
அவளை மெதுவாக உடைத்தது...

இன்று,
மீண்டும் அந்தக் கவிதைகளையே தேடி
வந்து,
அவற்றில் தன் உயிரைத் தேடுகிறாள்...

கவிதைகள் எதையும் கேட்கவில்லை...
"ஏன் விட்டுப் போனாய்?" என்று கூட
இல்லை...

அவளும் சொல்லவில்லை -
"நான் இழந்தது கவிதைகள் மட்டும்
இல்லை...
என் முழு உலகமே..." என்று...

—

த. சரண்யா ரவி
கோவை.



# எடுத்ததைக் கொடுக்க மனமில்லை.

நெஞ்சில்
நெருஞ்சிமுள் தைத்த
வலியின் பதற்றம்.
உடைந்த பார்வையை
மீட்டெடுக்க
வழிசொல் சகி.
*

உன் தேகச் சூட்டின்
கதகதப்பில்
மொத்தமாய்க் கரைய
அவசர அவசரமாய்த்
தரையிறங்கும்
ஆலங்கட்டிகள்...!!!
*

கிளி கொத்திய
பழத்தின் சுவையறிந்தேன்.
உன் பறக்கும் முத்தம்
என்னிதழ் பட்டுத் தெறிக்க...!
*

எடுத்துவைக்கும் பொழுதெல்லாம்
உன் நினைப்பில் தாறுமாறாய்த்
துடித்தியங்கும் இதயம்
இயல்பு நிலைக்குத் திரும்ப
நாளாகும் பெண்ணே!
*

கிளுகிளுப்பை ஆட்டி
என்னழுகையை
நிறுத்த முயற்சிக்கிறாய்.
பசித்த பிள்ளையாய்
உன்முகம் நோக்கிக் கிடக்கிறேன்.
நேசம் மிகுதியினால்...!
*

இரவைத் தின்னும்
பகல் பொழுதில்
கைகோர்த்து நடக்கையில்
உதட்டுச்சாயம் தெறிக்க
இதழ் வழி அமுதத்தை
சந்தனமெனப் பூசிக்கொள்கிறாய்.
அங்கெங்கும் காதல் மணம் ...!
*

என் செவிமடலருகே
உன் பெயரை
மெல்ல உச்சரிக்கிறாய்
என் அறை முழுக்க
பூக்களின் வாசம்...!
*

எனக்குத் தெரிந்த
பறவையொன்று அடுத்தொரு
புலம்பெயரும் நாளில்
உடன் என்னையும் அயல்தேசம்
அழைத்துச் செல்வதாய்ச்
சொல்லியிருக்கிறது.
*

வலி தாங்காமல்தான்
செய்யாத குற்றத்தை
ஒப்புக்கொண்டேன்.
கிடைக்கப் போகும்
தண்டனைக் குறித்து
பிற்பாடுதான்

யோசிக்க வேண்டும்.
*

தன்னைத்தானே
வரைந்து கொண்ட கோடு
அருகிலிருக்கும் கோட்டோடு
தன்னுயரத்தை
அளந்து கொள்கிறது.
அருகிலிருக்கும் கோடு
தன்னடர்தியை முழுமையாய்
தெரிந்து கொள்கிறது
அப்போது.



- பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

---

# பால் ஊதா நினைவுகள்

ஆலகாலம் என்றறிந்தே
சேர்ந்தேப் பருகினோம் நாம்
இயேசுவாய் வதைந்து
மெல்ல மாய்கிறேன் நான் -
நீ நறுமணந்து
வண்ண வண்ணமாய்ப்
பூத்துக் குளுங்குகிறாய் ?

## உன்னை விடவும் மரணம்

அவ்வளவு சிறந்தது.

## கருணையற்ற நீ

தினந்தினம்
கொல்லாமல் கொன்று
புசிக்கிறாய்
ஒரேயடியாய் மாய்த்துப்
பூமித்தாயிடம்
பத்திரமாய் ஒப்படைக்கிறது
நேசத்துடன் மரணம்.
நேயத்தின் நெடுஞ்சாலையில்
தலைநசுங்க சிதைத்துக்
கோரமாய் உயிர்ப்பறிக்கும்
கனிவற்ற மரணத்தின்
மிகக்கூரிய ஆயுதம் நீ !

## தீயை நெருங்கும் பட்டாம்பூச்சியாய்

நடுநடுங்கி உன்னை விழைகிறேன்
நீ மேலும் என்னை
எரிமலைக் கங்கினால் புணர்ந்து
என் சாம்பலினையும்
பேய்க்காற்றில் ஊதி மகிழ்கிறாய் !

## என் பிரிவை

நீ விரும்பி நேசிக்கிறாய்
வலுவிழந்து நடுங்கும்
மெல்லிய இதயத்தைக்
கோடரியால் கிழித்துத்
தகர்க்க விழைகிறது
பசிநிறைந்த மரணம்.

## என் சாம்பலில்

## சூட்டப்படும்

இறுதிப் பூச்சரத்தின் வண்ணங்களில்
மினுமினுக்கி மணக்கிறது
என்றும் விலகாத
நீயிருந்து தேன் இனித்த
பால் ஊதா நினைவுகள்.

## என் யாவற்றையும்

உன்னிடம் ஒப்புவித்துவிட்டேன்
இனிதாய் என்வசம்
ஏதுமில்லை
என்றறிந்த நாளொன்றில்
துச்சமென நீயெனை விலகினாய்
நீ கைவிட்டால் என்ன?
என் ஆறாத இரணங்களுக்கான
மாமருந்தை
மயிலிறகில் ஏந்திக்
மனமுவந்து காத்திருக்கிறது
அன்புடை மரணம்.

## வலிந்து பொழிந்த

அலட்சியத்தின் முதல் துளியில்
உன் பேரன்பின் ஒளி
மெல்ல இருள்கிறது
என் இருத்தலை நினைவூட்டும்
அத்தனை மலர்களின் மீதும்
துர்நாற்றம் வீசுகிறது உனக்கு
வற்றிய குளத்தின் ஆழத்தில்
இறந்த மீன்களின்
இறுதிக் கனவால்
என் இரவுகள் சிதைகையில்
நீ விளையாடி மகிழ்வது
நிறைந்து சுடரும் நிலவுடன்.

*

முற்றிலும் துறந்து
என் நினைவற்ற உன்னை
முழுவதும் நினைத்து
வேறுவழியின்றி
ஓர்நாள் மௌனமாய்
உலகை நீங்கிடுவேன்
என் இறுதி ஊர்வலப்
பாதையின் நெடுகிலும்
நீ அருகிருந்த பூத்த
ஏழுவண்ணப் பூக்களின்
நசுங்கிய சருகுகள்.

## உனக்காக சாக

ஒருவன் இருந்தான் என
என்றேனும் ஓர்நாள்
உன் விழிகள் கலங்குமெனில்
மரணத்திற்குப் பிறகும்
என் காதலுக்கு
இமாலய வெற்றி.

—

## பொன். தெய்வா

ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.



# காயப்போட்டிருந்த சட்டையில்

பறவையின் எச்சம்
மேல் பாக்கெட்டில்
இருப்பதைக் கண்டு
துவைக்கலாமென முடிவு செய்தேன்.

தண்ணீரால் மெதுவாக தேய்க்கும்போது
நெஞ்சு வலிக்க ஆரம்பித்தது.
சோப்பையும் நாரையும் எடுத்து
எச்சம் போகுமளவுக்கு
சட்டையைத் துவைக்க ஆரம்பித்தேன்.

சிவப்பு நிற அடர்ந்த
நுரை குமிழ்களில்
காடு இருப்பதைக் கண்டு
நிறுத்திவிட்டேன் துவைப்பதை.
இதயமும் வலியில்லாமல் இருக்கிறது.

—

துங்கன்

---

# மனித அகந்தை

வளர்ந்தன மரங்கள்,
யாரிடமும் விளக்கம் சொல்லாமல்

வீசியது காற்று,
வழி கேட்காமல்

ஓடியது ஓடைத்தண்ணீர்,
தன்னை நிரூபிக்காமல்

பறந்தது தும்பி,
துயரம் அறியாமல்

வட்டமிட்டது பட்டாம்பூச்சி,
அழகென்று தன்னை அழைக்காமல்

பசும் புல் தரை
காலடியில் இருந்தது,
தற்குறைவாக உணராமல்

பனித்துளி
பூமியைத் தொட்டது,
பேதமை இல்லாமல்

இயற்கையில்
எல்லாமே இருந்தது,
எதுவும் உரிமை கோராமல்...

உலகம் அமைதியாக இருந்தது,
“நான்” எனும் மனித அகந்தை
பேசத் தொடங்கும் வரை!!

மௌனச்சிதைவு

சில நேரங்களில்
நினைத்ததைச் சொல்ல இயலாது
இருப்பது
எவ்வளவு துயரம் -
சொற்கள் உள்ளே சத்தமிட்டு
கொண்டிருக்க
மௌனம் மட்டும்
வெளியில் அமர்ந்திருக்கும் போது.

சொல்வதற்கு துணிந்தாலும்,
குரல் நடுங்கி
அர்த்தம் பாதியில் உடையும் போது,
சில நேரங்களில் சொல்வதே
புரியாமலிருப்பது
எவ்வளவு துக்கம்.

புரியாதது மட்டுமல்ல -
தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதும்
ஒரு தனி வலி.
சில நேரங்களில்
புரிந்து கொண்டது போல
கண்கள் சொன்னாலும்,
நடைபெறாமல் இருப்பது
எவ்வளவு துன்பம்.

அறிதல் இருக்கிறது,
ஆனால் செயல் இல்லை;
அன்பு இருக்கிறது,
ஆனால் துணிவு இல்லை.
அங்கே தான்
மனித உறவுகள்
மௌனத்தில் சிதைகின்றன.

சொல்ல இயலாததும்,
புரியாததும்,
நடைபெறாததும் -
இவை மூன்றும்
ஒரே வேதனையின்
மூன்று முகங்கள்.

சில நேரங்களில்
வாழ்க்கை தோற்கடிப்பது
வலியால் அல்ல;
விளக்க முடியாத
இந்த இடைவெளிகளால் தான்!!!

## கவிதை எழுத முடியாத

வேளைகளில்
நானாகிறவன்
முழுமையற்றவனாய்
உணர்கிறேன்.
சொற்கள் இருக்கின்றன,
ஆனால்
சுவாசம் இல்லை...
வார்த்தைகள் இருக்கின்றன
ஜீவன் இல்லை..

இயலாதது
பின் இயலுமாகையில்,
எல்லையில்லா
இன்பம் கொள்கிறேன்
ஆன்மக்கதவு
திறந்து தூயமணங்கமழ்வதாய் ஆனந்தம்
துய்க்கிறேன்

ஏனோ,
இந்த கவிதையை
விட்டும்
வாழ முடியாதிருக்கிறது.
தப்பிய பாதை அல்ல, அது -
நான் தப்பிச்செல்லவே முடியாத
அடர்வனம்
நான் திரும்பும் வீடு.
நானுறங்கும் கூடு
என்
ஆன்மத்தின் திறப்பு,
இன்பத்தின் தவிப்பு,
என்
மௌனத்தின் மொழி

மனதின் கழியலையொலி

கவிதையே
நீ வராத நாள்களில்
நான்
என்னை இழக்கிறேன்;
நீ வந்த கணங்களில்
நான்
என்னை மீட்டெடுக்கிறேன்.

நீ எழுதப்படும்போது தான்
நான் திறக்கப்படுகிறேன்.
நீ இல்லையெனில் மூடப்படுகிறேன்


என் உயிரின்
தொடர்வாக்கியம்
நீதான்

நீ அழைக்கும் போது
நான் இருக்கிறேன்.
நீ மௌனமான போது
நானும் அருகி விடுகிறேன்.

நான் கவிதை எழுதவில்லை...
கவிதையே
நீதான் என்னை
எழுதுகிறாய்!!

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.



---

பொருண்மை:

# ஆண்மை வேண்டும் அணங்கிலும்!

பா வகை:
வஞ்சி மண்டிலம்
(மா + விளம் + விளம்)

காண்பாய் உயிர்களைக் கனிவுடன்
நீண்டச் செயலினால் நிலையுடன்
ஆண்மை வேண்டுமே அணங்கிலும்
வேண்டும் வாழ்வினில் வெற்றியே!

அன்பும் வேண்டுமே அனைத்திலும்
என்றும் மறவமே ஏற்றமாய்
நன்மைச் செய்திடு நலமுடன்
துன்பம் நீக்கிடுத் துணிவிலே!

மண்ணும் சிறக்குமே மாண்பிலே
எண்ணம் உயர்ந்திட ஏற்றமே
உண்மை ஓங்குமே உலகிலே
விண்ணும் ஆண்மையை வியக்குமே!

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.



# உண்டா?

வெற்றி கிடைத்த பின்
உள்ளுக்குள் மட்டும்
உவகை கொண்டு
அடுத்த கட்ட நகர்வுக்கு
தயாரானது உண்டா

எதிர் மனிதர்
பேசும் போது
கவனச்சிதறல்
இல்லாமால்
உள் வாங்கும்
பழக்கம் உண்டா?

உணவருந்துகையில்
மற்றவை பற்றி
யோசிக்காமால்
ரசித்து ருசித்து
உண்ணும்
பழக்கம் உண்டா?

ஒரு செயல் பயணத்தில்
வேறு சிந்தனைகளற்று
அதில் மட்டும்
கவனம் செலுத்தும்
பழக்கம் உண்டா?

ஆம் எனில்
நிகழ்காலத்தில்
இருக்கின்றிர்கள்.

## எல்லாத்துக்கும்...

அனைத்து
யோசிப்புக்களும்
எண்ணங்களுக்கும்
செயல்பாட்டிற்கும்
முடிவுக்கும்
யூகத்திற்கும்

மற்றவர்களின்
அங்கீகாரமாய்
பாராட்டையும்
விமர்சனமாய்
வசை மொழியையும்
கேள்விகளுக்கான
பதற்றத்தையும்
பார்த்துக்கொண்டே
இருந்தால்

நமக்கான
நம்மின் மீதான
நம்பிக்கையும்
தனித்தன்மையும்
சுயமும்
எங்கே போகும்?

## அதனாலா..

குழுவாய் இருக்கையில்
தான் மட்டுமே
பேச நினைப்பது
இருப்பை காட்டிக்கொள்ளவா

இல்லத்தில் உணவு தயாரிக்கபடுகையில்
தனக்கு பிடித்தது மட்டுமே
இருக்க நினைப்பது
அனுசரிப்பு இல்லாததாலா

உணவகத்துக்கு
உறவுகளோடோ
தோழமைகளோடோ

செல்கையில்
எனக்கு வேண்டாம்
என்பது
திரும்பி பார்க்க வைக்கவா

சுவராசிய பேச்சுக்கு
அரங்கமே அதிர
உடல் மொழியோ
உதட்டு மொழியோ
காட்டாமல் இருப்பது
உள்ளுக்குள்ளே
வேறு சிந்தனைகளில்
இருப்பதா

## பின் நோக்கிய பார்வையில்...

அலுவலகப்பணி
கணினியில் தானே
என்ன சிரமம்?

திட்டமிட்டு
சரியாய் செயல்பட்டால்
முடிவுக்காக
என்ன பதற்றம்

நாம் சரியாய்
இருந்தால்
என்ன நடந்து விடும்?

அவர் அப்படி
பேசியிருக்க வேண்டும்...

இவர் இப்படி
செயல் பட்டிருக்க வேண்டும்...

கல்லூரி காலங்களில்
களம் பார்க்காமல்
யதார்த்தம் தெரியாமல்
வேறு காரணிகளும்
உண்டு என்பதை
அறியாமல்..

பேசிய பேச்சு
இன்று நினைக்கையில்
சிரிப்பு சிரிப்பாய்...

## அந்த கணத்தை

பிடித்த இசையை
கேட்கும் போது

ரசிக்க வைக்கின்ற
நகைச்சுவையை
பார்க்கும் போது

யோசிக்க வைக்கின்ற
சிந்தனைகளுக்கு
செவி கொடுக்கின்ற போது

மன புத்தி ஓய்வுக்கு
வெளியுலகம்
செல்லும் போது

அதை வேறு சிந்தனைகளற்று
முழுமையாய்
அனுபவிப்போம்
ஞாபக அடுக்குகளில்
சேமிப்போம்

முன்னது

இந்த கணத்துக்கு

பின்னது
சோர்வு ஏற்படுகையில்
எண்ணிப்பார்த்து
புத்துணர்வு ஏற்பட...

## எது இருந்தால்?

தெரிந்து கொள்ள வேண்டிய
தேவை இருந்தால்

சாதிக்க வேண்டும்
என்ற துடிப்பு இருந்தால்

அறிந்தது கொஞ்சமே
என்ற தன்னடக்கம் இருந்தால்

மற்றவர்களின் சிறப்புக்களை
மதிக்கின்ற குணம் இருந்தால்

அங்கு
தேடல் நிச்சயம்
இருக்கும்...

## நினைவுகள் சுடுகிறது

இந்த கணத்தில்
வாழ்ந்த பள்ளிக்காலம்

கணக்குப்பதிவியிலில் முழுமதிப்பெண்
பெறதாத
தேர்வு

மனது நினைத்தை

உதட்டுமொழியாக்கிய கல்லூரிக்காலம்

சொந்தமண்ணில் தோழமைகளோடு
சுற்றிய இளமைக்காலம்

அரசுப்பணியை நூலிலையில்
தவறவிட்ட பொழுது

எழுத்துலகில் சாதிப்போமென
எண்ணிய நாள்கள்

வருடக்கணக்கில் ஞாயிறு
மட்டுமே இல்லவாசம்

மனதில் நீங்கா
நினைவுகளாய் சுடுகிறது

## எப்போதாவது...

இன்றைய
நாளைய
நடந்தது
நடக்கப்போவது
பற்றிய கேள்விகள்
எதிர்வினை இல்லாமால்
மனது
புத்தியை அதன் போக்கில்
எப்போதாவது
விட்டு விடுவதும் உண்டு

மழலைகளே
நேரக்கணக்கு பார்க்காமால்
விளையாட அனுமதிப்பது
போல

விரும்பிய உணவை

கட்டுப்பாடுகள்
இல்லாமால்
எடுத்துக்கொள்ள
அனுமதிப்பது போல...

## வார்த்தை சுகத்தில்

அழகாய் இருக்கே
செயல் சிறப்பு
பேச்சு அபாரம்
நல்ல மனது
உடுப்பு அட்டகாசம்
எளிமையாய் பழகுகிறே

இந்த வார்த்தைகள்
வருடல்கள்
பாசத்தலோ
ஊக்குவிப்பாகவோ
ஏன் காரியம் ஆக
சொன்னதாக கூட
இருக்கலாம்

ஆனால்
கேட்டுக்கொள்ள வேண்டியது
உண்மையா
எனது மனதுக்குள்...

## எண்கள் வழியே எண்ணங்கள்....

சாதிக்க வேண்டும் என்ற ஒன்றாய்
இலக்கு

இலக்கை அடைய
அவசியமான
இரண்டாய்
திறமையும்
உழைப்பும்

செயல் முடித்தப்பின்
முடிவு தெரியும் வரை
மூன்றாய்
பொறுமை
நம்பிக்கை
மன உறுதி

வெற்றி கிடைத்தப்பின்
தொடர நான்காய்
கவனம்
தொடர் முயற்சி
தேடல்
பொறுப்புணர்ச்சி...

## ஆமாவா? இல்லையா?

வாசிப்பு
யோசிப்பை
கொடுக்க வேண்டுமா
'ஆம்'

யோசிப்பின்
நீட்சியாய்
படைப்புக்கள் உருவாக
வேண்டுமா?
'கட்டாயம் இல்லை'

கடின முயற்சிக்குப்பின்
பெறும் தோல்விக்கு
காரணம் அறிய

வேண்டுமா?
'ஆம்'

முயற்சியை
கைவிட வேண்டுமா
'நிச்சயம் இல்லை'

பேச்சு கவனிக்கப்படாத
போது நிறுத்தப்பட வேண்டுமா,?
'ஆம்'

சொல்ல வேண்டிய
நேரத்தில்
பேசாமல் இருக்கலாமா?
'உறுதியாய் இல்லை'..

## மட்டும்...

உதவி
பெறுவதற்கு மட்டும்

மனிதம்
மேடை பேச்சுக்கு மட்டும்

நியாயம்
பேசுவதற்கு மட்டும்

நிஜம் சாதகமாய்
இருக்கும் போது மட்டும்

சாதனை
தன்னுடையது மட்டும்...

## மூன்றாய் மனிதனாய்

பிரிவு என்றால்
வருத்தம் தான்

தோல்வி என்றால்
மன வேதனை தான்

இந்த பணி தானே
எளிமையானது

என்று நிகழ்வுகளிலிருந்து
விலகி மூன்றாய் மனிதனாய்
எளிதாய் எல்லோருமே
சொல்லலாம்

ஆனால் அவை
தனக்கு சம்பவிக்கும் போது
தான் அதன் ஆழத்தை
உணர முடியும்...

## சுற்றி சுற்றி வந்திங்க...

இலக்கை நோக்கிய
பயணத்தில்

தடைகள் தொடர்ந்து
கொண்டே வர

பதற்றங்கள்
சேர்ந்து பயணிக்க

முயற்சிகள்
நீண்டு கொண்டே போக

மற்றவைகளுக்கு

புத்தியில் இடம்
கொடுக்காமால்

காரியம் முடிய
வேண்டுமே
என்ற எண்ணம் மட்டும்
சுத்தி சுத்தி வந்திங்க...

## இருந்தால் என்ன
இல்லாவிட்டால் என்ன?

திறமை இருந்தும்
வெளிப்படுத்தாமையும்

உழைக்க முடிந்தும்
செய்யாமையும்

விமர்சனங்களுக்கு
பதில் தெரிந்தும்
சொல்லாமையும்

உதவ முடிந்தும்
மறுப்பதும்

தீர்வுக்கான
யோசனை இருந்தும்
மௌனம் காப்பதும்

அவைகள்
இருந்தால் என்ன
இல்லாவிட்டால் என்ன

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



---

# ட்ரங்குப் பெட்டி ஒரு திறப்பு

ட்ரங்குப் பெட்டி என்றொரு வசுதுவை இன்றைய தலைமுறை அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ட்ரங்கு பெட்டிதான் பீரோவுக்கு முந்தைய வாழ்வு நமக்கு அளித்திருந்தது. எனக்கு சின்ன அளவில் ஒரு ட்ரங்குப் பெட்டி இருந்தது. ஒரு மாதிரி அடர் சிகப்பு நிறத்தில் மினுங்கும் வடிவத்தில் அது நம் சொத்து போல ஓர் உணர்வு தரும். அதில்தான் என் உடைகள் இருக்கும். பெட்டியைத் திறந்ததும் ஒரு குளிர் வாசனை வரும். ஆழ முகர்ந்து கொள்வேன். பாச்சை உருண்டை போட்டு.. அதோடு துணியின் வாசமும் கலந்து அது நன்றாக இருக்கும்.

துணிகளை வெளியே எடுப்பதும் மீண்டும் உள்ளே வைப்பதும் அது ஒரு பிடித்த

விளையாட்டு போல. சில நேரங்களில் கோலி குண்டுகளை உள்ளே பதுக்கி வைக்கவும் பயன்படுத்துவேன்.

இனம் புரியாத இன்பம் பொங்கும் கண்களை ட்ரங்குப் பெட்டிதான் திறந்தது என்று இப்போது உணர்கிறேன்.

படிப்புக்காக ஹாஸ்டல்க்கு செல்லும் யாரின் கையிலும் ட்ரங்குப் பெட்டி தான் இருக்கும். சூட்கேஸ்க்கு முந்தின நிலை என்று சொல்லலாம். அதைத் தூக்கி போவதற்கோ அதை பேருந்தில் கொண்டு செல்வதற்கோ எந்தவித தயக்கமோ சங்கோசமோ இருந்ததில்லை. அது ஒரு பழக்கமாகவே எல்லாரிடமும் புழங்கி இருந்தது.

ட்ரங்குப் பெட்டியோடு யாராவது பேருந்தில் இருந்து இறங்கினால் உரம்பரை வந்திருக்கிறார்கள் என்றே அர்த்தம். பள்ளி விடுமுறை சமயங்களில் விடுதியில் இருந்து வீடு திரும்பும் பல கைகளில் ட்ரங்குப் பெட்டிகள் டாலடிக்கும். லீவ் முடிந்து திரும்பி விடுதி போகையில் சோர்வாக இருக்கும்.

பெட்டிக்கு மேல் பெட்டி என்று அடுத்தடுத்து அடிக்கி வைத்திருப்பார்கள். இருவருக்கு ஒரு பெட்டி என்ற கணக்கில் இருக்கும். சில வீடுகளில் சற்று பெரிய பெட்டியில் நாலைந்து பேர் துணிகளும் இருப்பது போல பார்த்துக் கொள்வார்கள். துணிமணிகள் குறையாவாக இருந்த காலம்தானே அது. ஆறேழு சட்டைகள் இரண்டு மூன்று கால்ச்சட்டைகள் வைக்க அந்த சின்னப் பெட்டி போதுமானதாக எனக்கு இருந்தது. அது குட்டியாக தாவிக்கொண்டாலும் என்னோடு அடங்கிக் கொள்வதாக இருக்கும் அளவில் தான் இருக்கும். பூட்டுக்கு ஆப்சன் இருக்கும். ஆனால் பூட்டுக்கு தேவை இருக்காது.

ட்ரங்குப் பெட்டி காலத்தின் அடையாளமாக இருந்திருக்கிறது. பச்சை நிறத்தில், அடர் சிகப்பு நிறத்தில், கூடுதல் அடர் நிறத்தில் கருப்பு நிறத்தில் என ட்ரங்குப் பெட்டிகளின் நிறம் மெருக்கூட்டக் கூடியது.

டேய் உனக்கு தனியா ட்ரங்குப் பெட்டி இருக்கா என்று ஆச்சரியமாய் சிவகுமார் கேட்பான். பிறகு தான் தெரிந்தது அவனுக்கு இல்லை என்று. என் வயது பசங்க நிறைய பேருக்கு தனிப் பெட்டி இல்லாத காலத்திலேயே எனக்கு தனியாக ட்ரங்குப் பெட்டி இருந்தது.

அதில் ரகசியம் பொதிந்து வைப்பது போலவும்... புதையலை திறந்து எடுப்பது போலவும் தான் எனது அணுகுமுறை இருக்கும். யாரையும் தொட விட மாட்டேன். ஜெனிபரின் கர்சீப்பைக் கொண்டு வந்து அதன் அடியாழத்தில் புதைத்து வைத்ததை பிறகு மறந்தே

போனேன் என்பது தலையில் அடித்துக் கொள்ளும் எமோஜி உருவ சம்பவம்.

தலைக்கு மேல் இருக்கும் அட்டாலியில்தான் எல்லா ட்ரங்குப் பெட்டியும் ஒன்றன் மீது ஒன்றாக இருக்கும். என்ன... ஒரு வீட்டுக்கு ரெண்டு மூன்று இருக்கும். அவ்வளவுதான். யானைக் கூட்டத்தில் குட்டி யானை காலுக்கடியே தள்ளாடி தத்தளித்து நடப்பது போல என் ட்ரங்குப் பெட்டி மற்றவர்களுக்கு மேல் அந்தரத்தில் அசைவதாக தெரியும்.

உச்சியில் இருந்தே பழக்கப்பட்ட கண்களில் என் ட்ரங்குப் பெட்டியும் உச்சியிலேயே தான் இருக்கும். யார் அவர்கள் பெட்டியை எடுத்தாலும் என் பெட்டியை எடுத்து கீழே வைத்து விட்டு தான் எடுக்க முடியும். சில நேரங்களில் மறுபடியும் என்று வைக்க மறந்து விடுவார்கள். அல்லது அப்புறம் என்று யோசித்திருக்கலாம். பள்ளி விட்டு வந்ததும் இந்தக் காட்சி கண்டு விட்டால் கத்தி கூச்சல் போட்டு விடுவேன். எனக்கு எடுத்த பொருள் எடுத்த இடத்தில் இருக்க வேண்டும். அதுவும் என் பொருள் என்றால்... மன்னிப்பே கிடையாது.

அந்தப் பெட்டி என்னாச்சு என்று ஏனோ இதுவரை யோசிக்கவே இல்லை. அடுத்தமுறை ஊருக்கு போகையில் தேட வேண்டும்.

பிறகு ஒரு நாள் அது அப்படியே சூட்கேஸ்க்கு மாறி விட்டது. அது எப்படி என்று யோசிக்க முடியவில்லை. கண்களை அமிழ்த்தினால் திறந்து கொள்ளும் பெட்டிகள் விளையாட்டு பொம்மை போல நமக்கு. ஓடுவது வருவது படக்கென்று அதன் கண்களை அழுத்தி விட்டு அது திறந்து கொண்டதும் கார் பேனட்டை திறப்பது போல திறந்து உள்ளே ஆராய்ந்து விட்டு உள்ளே இருக்கும் கிராஸ் பெல்ட்டை ஒரு முறை இழுத்து படக்கென்று விட்டு விட்டு மூடி விடுவது... இந்த விளையாட்டில் ட்ரங்குப் பெட்டியை மறந்தே போனேன்.

ஏனோ யோசிக்க எதிலோ வந்து மோதிய ட்ரங்குப் பெட்டி மனதுக்குள் மூடிக் கிடந்த அதன் பக்கங்களைத் திறந்து கொண்டது. அதன் தரிசனங்கள் மினுங்கும் மயிலிறகு போல. அதன் வாசம் எனக்கடிக்கிறது. அந்த குளுமையை நான் உணர்கிறேன். எல்லாம் தாண்டி அது வழக்கம் போல பொதிந்து வைத்திருக்கும் பொக்கிஷம் அது எனக்கு மட்டும். திறந்து திறந்து மூடி அதன் காலத்தின் கைகளைப் பற்றிக் கொள்கிறேன். சின்னக் கைகளில் சித்திரம் ஆகிறது ட்ரங்குப் பெட்டி.

பாட்டி வீட்டு ட்ரங்குப் பெட்டி நீ என்றொரு கவிதை முன்பு எழுதி இருக்கிறேன். பாட்டி வீடே ட்ரங்குப் பெட்டி என்று இப்போது எழுதத் தோன்றுகிறது.

**- கவிஜி**

# தோழர் நல்லகண்ணு

சமூகத்தை
சமப்படுத்த
திருநெல்வேலியிலிருந்து
கிளம்பியது
ஓர் அரிவாள்

இந்த அரிவாள்
பிறரின் ரத்தத்தை
சூடியதல்ல
தனது
ரத்தத்தையே சூடியது
பிறருக்காக

ஜனசக்தி இதழில்
ஒரு ஜனத்தின்
சக்தியைக் காட்டியது
இவரது கட்டுரை

பதுக்கிய
நெல் மூட்டைகள்
வெடித்து
வீதிக்கு வந்தது
இவரின்
எழுத்து குண்டுகளால்

வயல்கள்
பச்சை ஆடை அணிய
சிகப்பை சூடிய
கருப்பு இவர்

எளிமையை
புறத்திலும்
வலிமையை



அகத்திலும் கொண்ட
இக்கருப்பு
மனதில் கொண்டது
வெண்மையை

பயிருக்கு
கிடைமட்டமாகவும்
உரிமைக்கு
செங்குத்தாகவும்
நிற்கும்
இந்த அரிவாள்

அண்ணாந்து பார்க்கும்
தலைவர்களுக்கு மத்தியில்
அருகிலிருந்து பார்க்கும்
தலைவர் இவர்

இவரது
போராட்ட வரலாற்றைக்
கூறும்
சிறைச்சாலை
எங்களுக்கு
பாடசாலை ஆகிறது

முதுமையால்
குரல்
ஒடுங்கிப் போனாலும்
தீண்டாமைக்கெதிராக
உயர்ந்து ஒலிக்கிறது
இவரது குரல்

கோடி கிடைத்தாலும்
கொடை கொடுக்கும்...
இலட்சம் கொடுத்தாலும்
இலட்சியத்தை மட்டுமே
தொடும்

இவரது உள்ளங்கை

சிறையிலிருந்து
நாட்டின்
விடுதலை செய்தியைக்
கேட்டவர்...
விடுதலையாகியும்
போராடுகிறார்
சமூகச் சிறைகளை
தகர்த்தெறிய



உயிர் போனாலும்
நாட்டு மக்களுக்காக
வாழ்கிறது
உயிர் போன உடலும்
உள்ளுக்குள் சிவப்பு உதிரமும்

செவ்வணக்கம் தோழர்!

- சா. கா. பாரதி ராஜா,
திம்மாவரம், செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732

---

# தரையெங்கும் ஒளிச் சிதறல்

வேகமாய் விழுகிறது
குடிசையில் சூரியன்

சிறுமியின் ஊதல்
உடையாமல் பறக்கிறது
வண்ணப் பெருவெளி

குத்தும் முள்
அப்போதும் சுமக்கிறாள்
அடுப்பெரிக்கும் பாட்டி

கடலாகி விடுகிறது
கண்ணாடித் தொட்டி
நேற்று பிறந்த மீனுக்கு

சுடுகாட்டுச் சுவர்
வண்ணங்களில் ஒளிர்கிறது
ஆயுள் காப்பீட்டு விளம்பரம்

தொட்டியில் வண்ணம்
மீன்களைத் தாண்டி
அழகாகிறது நீர்

சாலையோர நகை விளம்பரம்
இமைக்காமல் பார்க்கிறது
சிறுமியின் விழிகள்

உடைந்த கண்ணாடியில்
வைரமாகிறது நீர்
மழையை ரசிக்கும் சூரியன்

சுமக்காத நாளில்
வயிறு சுமக்கிறது
சுமைதூக்கியின் பசியை.

தடம் பதிக்கிறது
தடுமாறா எறும்புகள்
குவியல் இனிப்பில்.

மரித்தும் பயணிக்கிறது
காற்றின் கரம் பற்றிய
சருகான இலைகள்

வீணை உறையெங்கும்

பெருகும் ராகம்
கொசுக்களின் பவனி

தினமும் பூ மழை
தெய்வத்தையும் முந்துகிறது
பவளமல்லி மரத்தின் கீழே பல்லி

யானை மீது ஊர்வலம்
அணிவகுப்பில் எறும்புகள்
நகராத கோவில் தூண்கள்.

மதக்கலவரம்
மருத்துவமனையில்
பேதமற்ற குருதியேற்றம்

- இளையவன் சிவா

---

# பாலைவன லாந்தர் – ஒரு கேலிச்சித்திரக் கதை

ஆச்சரியமாக இருந்தது.

ஊருக்குள் சாவு விழுந்து விட்டால் பத்து நாளைக்கு அந்த பக்கமே போகாதவனா இன்னைக்கு பிணத்துக்கு ஆறுதலாக அருகிலேயே அமர்ந்திருக்கிறான். நானும் வந்ததில் இருந்தே கவனிக்கிறேன். அவன் முகத்தில் அசைவே இல்லை. சாவு வீடென்று அப்படி இருக்கிறான் என்றுதான் கடந்த முறைகளில் அவனை வேறு நல்ல விசேடங்களில் பார்த்திராவிட்டால் நம்பி இருப்பேன். கடந்த முறை ஒரு கல்யாண வீட்டில்கூட அவன் அப்படித்தான் இறுகி இருந்தான். சிரிப்புக்கு அர்த்தம் மறந்த முகம். சிந்தனைக்குள்ளும் சிக்கிக் கொள்ளாத உடல். ஒரு கடமைக்கு வாழும் உயிருள்ள பிண்டமாக எப்படி இப்படி மாறிப்போனான்.

முப்பத்தைந்து வயதுவரை அவன் ஒரு சுகவாசியாகத் தான் இருந்தான். நேரத்துக்கு சாப்பிட வேண்டும். இல்லையெனில்... அவன் அப்பாவோ அம்மாவோ... அடேய்... சீவகா.... வந்து சோத்தை தின்னுட்டு போய் உக்காந்துக்கோ என்று தான் சொல்வார்கள். ஊரே திட்டும். உள்ளத்தின் மடிப்பில் ஒரு முரட்டுக் குழந்தையைப் போல சிரிப்பான். ஆனால் இன்று ஒரு கேலிச்சித்திரம் போல தெரிகிறான்.

மரித்து போனது அவன் அக்கா வீட்டுக்காரர். இந்த செத்த மனிதன்... எத்தனை முறை சீவகனை கதவை சாத்திக்கொண்டு சாத்தியிருப்பார். அடினா அடி ஆயுசே கதி கலங்குகிற அடி. அப்புறம் நான் தான் கைத்தாங்கலாக அழைத்து போய் பாட்டியிடம் சொல்லி சுடு தண்ணி ஒத்தடம் தருவேன். ஒரு கால் பல்லி போல பார்ப்பான். புது சுவர் ஓவியம் போல வடும்பு இருக்கும்.

இவனுக்கெல்லாம் நல்ல சாவே வராதுடா குட்டி என்பான். அழுகையில் பாவமாக இருக்கும். அதை விட அழுதுகொண்டே சிரிப்பானே ரொம்ப பாவமாக இருக்கும்.

சாவு வீட்டுக்கு வந்ததுமே கை பிடித்து ஆறுதல் அளிக்கும் இடத்தில் அவன் தான் நின்றான். அவனுக்கு கையைப் பற்றவே தெரியவில்லை. பற்றிய கைக்கு பதிலும் தெரியவில்லை. வருவோர் கண்கள் பார்க்கவும் தெரியவில்லை. எதிரே தான் அமர்ந்திருக்கிறேன். கொஞ்ச நேரத்தில் குழப்பம் கூட வந்து விட்டது.

படுத்திருப்பவர் செத்தவரா... அருகே அமர்ந்திருக்கும் இவன் செத்தவனா. ஒரு அசைவு இல்லை. ஒருவேளை உள்ளே குதூகலிக்கிறானோ. சட்டென அவன் உடல் ஒரு கேலிச்சித்திரமாக சேரில் ஏறி கய் கி... கோ... கி... என்று முகத்தை கோணி ஆடுவது போல தெரிந்தது. போல என்ன போல. அவன் அப்படித்தான் ஆடுகிறான். கூட சேர்ந்து பாதிரியார் வேடம் போட்ட ஒருவர் ஆடுவதும் பார்க்க நன்றாக இருக்கிறது.

வாழும் போது எப்படி வாழ்கிறோம் என்பதில் இருக்கிறது செத்த பிறகான இறுதிக்கூட்டம். வாழ்நாள் முழுக்க பித்தலாட்டம். இதோ கூட்டத்தைக் காணோம். எனக்கென்னவோ என்னைத்தான் தூக்க விடுவான்கள் என்று தோன்றுகிறது. கேலிச்சித்திரத்தில் என்னையும் இணைத்தது எவன்டா.

நீ குட்டிவீரன் தான... என்ற பாதிரி கேலிச் சித்திரத்துக்கு... பதில் சொல்ல ஒரு பெரிய மனிதத் தோரணையைச் செருமிக் கொண்டேன்.

சுய அரிப்புக்கு சூடு வைத்த ஒரு துள்ளல் நடையில் அவரிடம் சென்று ஆம் என்று தலை ஆட்டினேன். அவருக்கு இல்லை என்று தெரிந்திருக்கலாம். என் தலையாட்டல் அப்படி. எதிரும் அற்ற இருப்பும் அற்ற சுழல்.

என்ன ஊர் பக்கம் வர்றதே இல்ல.. நல்ல வளர்ந்துட்ட என்றார்.

அட பாதகத்தா... நான் மொத்தமே நாலடி தான். அதான் என் பேரே குட்டி. வீரன் நானே வெச்சிக்கிட்டது. இப்படி பாக்க பாக்க புளுகுறான்.. மனம் பேசினாலும்.. குரல் ஜமாளித்தது. எங்க வளர்ந்தேன். தினம் தினம் என்னைய தான் அளந்தேன். முனங்கிக் கொண்டேன். ஏன் வர்றது இல்லனா இவர் இப்பதான செத்தார்... அதான் இப்ப வந்துருக்கேன் என முழங்கினேன். பட்டப்பகலில் ஒரு ஆந்தையாக ஆகி விட்டு திரும்பிக் கொண்டார். சிரித்துக் கொண்டே வளைந்த உடலை தூக்கி பா பா பா என்று கைகள் வீசி நடந்தபடியே என் இருக்கைக்கு வந்தேன்.

குட்டிவீரா... ஒரு ஒன் பிப்டி கிடைக்குமா என்று கேட்டவன்...வக்கீல் உடையில்

இருந்தான். இப்போது தான் நீதி மன்றத்தில் இருந்து வந்திருக்கிறான் போல.

ஒன் பிப்டி இருந்தா ஒரு கட்டிங் போட்டுட்டு ஜம்முனு சாவு வீட்ல நிப்பேனே. யார்ரா இவன்... என்று பார்த்தேன். பக்கத்தில் இருந்த சதா... ஐயோ அண்ணா அவன் பைத்தியம். பேச்சு குடுக்காதீங்க என்றாள். அவளைப் பார்க்க தான் பைத்தியம் போல இருக்கிறது. பைத்தியத்தைப் பார்க்க வைக்கீல் போல தான் இருக்கிறது. என்ன ஒரு குழப்பம்... தலையை முதுகில் இருந்து சுரண்டி எடுத்து கழுத்தில் வைத்துக் கொண்டேன்.

குட்டி வீரா... ஒன் பிப்டி என்று ஒன் பிப்டியாவது தடவை கேட்டவனுக்கு வேர்க்க விறுவிறுக்க பதில் சொன்னேன். முன்பே அழுதும் விட்டேன். நான் குட்டி வீரன் இல்ல. குஞ்சிலி புருசன். செத்தவரோட சின்ன வீட்டு ஒன்னு விட்ட தம்பி.

பைத்தியம் என்று முனங்கி கொண்டே நகர்ந்து கொண்டது பைத்தியம்.

மாலை கொண்டு வந்த ஒரு சொந்தம்... கண்ணாடிப் பெட்டிக்கு மேலே வைத்து விட்டு ஒரு பாம்பாக வளைந்து நெளிந்து ஆடியது. செத்தவன் பொண்டாட்டிக்கு கண்ணு ரெண்டும் வெளியே வந்து சுழன்றது. சிலேபி கொண்டை சிலுத்துக் கொண்டு அவிழ்ந்தது. புது டைப் அழுகையா இருக்கே.. என்ற ஆச்சரியம் தான் எல்லாருக்குமே. விட்டா பெட்டிய உடைச்சிட்டு பக்கத்துல போயி படுத்துக்குவான் போல. ஆனா ஒரு சொட்டு கண்ணீர் வரல.

சட்டென பாலைவனத்தில் ஒரு லாந்தர் விளக்கு இரவில் குளிர் விரட்டி நடப்பதாக வந்த காட்சியை மடக்கி பையில் அழுத்தினேன். இதயம் பிரகாசித்தது.

சாமியானா எதுக்கு போட்ருக்கானுங்கனே தெரியல. வெயில் வாயைத் திறந்து கொண்டு ஒப்பாரி வைக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மிருகம் போல தெரிவது எனக்கு மட்டுமா. கழுத்து வரை சிரிப்பை பதுக்கிக் கொண்டு கண்களில் போலி சுவடுகளை சொட்டும் சில பெண்கள் வேர்வைக்குள் பொழிந்திருந்தார்கள். கம்கூடு கசகசப்பு.... ஊறிப்போன ஈரத்தில்... ச்சே... கண்ணெல்லாம் அங்க எதுக்குடா போகுது உனக்கு.... பொறம்போக்கு.. பொணத்து பக்கம் போயி நில்லுடா என்று நாய் மாதிரி கத்திய ஒரு கேலிச்சித்திரம் ஊருக்கு புதுசு போல. அடையாளம் தெரியவில்லை.

என்ன எழவுடா நடக்குது... வாய் விட்டே முனகிவிட்டேன்.

இந்த எழவு தான் என்று நெஞ்சு நெஞ்சாய் அடித்துக் கொண்ட அன்பான்... அட இன்னும் இவன் உயிரோடதான் இருக்கானா... தூக்கு போட்டு செத்துட்டான்னு ஊர்சுத்தி சங்கரன் சொன்னானே.

சொல்லி இருப்பான்.... நான் தொங்குனது உண்மை தான்.. ஆனா செத்தது மாதிரி நடிச்சேன்... என்றானே... எனக்கு ரெண்டு விஷயம் தெரிய வேண்டும். நான் மனதுக்குள் நினைத்தது அவனுக்கு எப்படி கேட்டது. இன்னொன்று••• ம்ம்ம் அது மறந்து போச்சு.

இப்படித்தான் எதிரே இருப்பது எல்லாம் எதிரேவா இருக்கிறது என்று தோன்றும். கீழே இருப்பதெல்லாம் கீழேவா இருக்கிறது என்று கேட்கும். சாமி கும்புடுகிறவனுங்க சட்டுனு வானத்தை பாப்பானுங்களே... ஒன்னும் புரியாது. புரிஞ்சாலும் அது அந்த ஒன்னான்னு தெரியாது. ஏன் இப்படி இந்த கேலிச்சித்திரங்கள் கிழிஞ்ச வாழ்க்கைக்குள்ள கடவுளை தூக்கிட்டே அலைகிறான்கள்... என்று தவளை ஒன்று தவ்வும். அதன் கவலை அதற்கு.

ஒரு தேனீர் குடுக்க ஆள் இருக்கா... அல்லது ஒரு கொட்டை வடிநீர் குடுக்க ஆளி இருக்கா. மூதேவிங்க... ஆளாளுக்கு மூஞ்ச காத்துல தேச்சிட்டுருக்கானுங்க. எனக்கு இப்ப கருப்பு தேநீர் வேணும். சாவு வீட்டுக்கு வந்தவனுக்கு ஒரு மரியாதை வேண்டாம்... மயிராண்டிகளா. எனக்கென்னவோ செத்தவன் தான் நான் பேசறதை கேட்டுட்டு இருக்கற மாதிரி இருக்கு. மத்தவன்லாம் செத்தவன் மாதிரியே இருக்கானுங்க.

கிருத்துவ முறைன்னானுங்க... கோடி துணி போடறானுங்க. தாலிய வேற அறுக்கறானுங்க. அட வளையலையும் உடைக்கறானுங்க. கொட்டும் அடிக்கறானுங்க... கூடவே பைபிளும் படிக்கறானுங்க.. என்ன கருமம் இது...

எந்த கண்ணில் இருந்தும் ஒருதுளி நீர் வரவில்லை. ஒருத்தனுக்கும் கண்ணு இருக்கா என்ற சந்தேகமும் உண்டு. வால் முளைத்த மனிதர்கள் நின்ற இடத்தில் இருந்தே நடப்பது எந்த வகை பாவனை.

டேய் செத்தவா... நீ வாழ்ந்தே இருக்கலாம். அவளோ கேவலப் படுத்தறானுங்க.

ஒரு செத்த மனிதனுக்கு செய்யும் எந்த கனிவும் இந்த கூட்டத்தில் இல்லையே. எடுத்தும் விட்டான்கள். கொட்டுக்கொன்றும் குறைச்சல் இல்லை. கூர் கெட்டா குறுக்கு நிக்காது. குத்தால குயிலே குத்தால குயிலே உக்காந்து பேசலாமா என்று நேரம் காலம் தெரியாத எவனோ ஒருவனின் செல் அலறுகிறது.

தூவென துப்பி விட்டு கூட்டத்துக்கு முன்பாக இணைந்து கொண்டேன். என் வளைவுகள்

நெளிந்த நடைக்கு கோடுகள் போதவில்லை. சட்டென என் கோடுகள் போதாமைக்குள் சிதறின. சுற்றும் முற்றும் பார்த்தேன்.

ஐயையோ என்ன இது செத்தவன் கூட்டத்தோடு கூட்டமாக நடந்துகிட்டிருக்கறான். என் வளைவு நெளிவு வேகமெடுத்தது. சட்டென தோன்ற மெல்ல பெட்டிக்குள் எட்டிப் பார்த்தேன்.

கண்கள் திறந்தபடியே படுத்திருக்கிறான் சீவகன். இதழோரம் மீச்சிறு புன்னகை.

- கவிஜி

---

# வசதி வந்தது வாடகை வீட்டில்

இருந்தவர்கள் சொந்த வீடுகட்டி
குடியேறினார்கள்...!

இவ்வுலகில் யாரும் விசுவாசமாணவர்கள்
இல்லை என்பதை அன்று தான்
உணர்ந்தது வாடகை வீட்டின் வாசலில்
நட்ட ரோசச்செடி...
*

மூன்று தங்கைகளுடன் முன்பிறந்த மூத்த
ஆண்பிள்ளை போல் நிழல் தந்த மரங்கள்
யாவும் இன்று நிர்வாணமாய்
நிற்கின்றன...

## இலையுதிர் காலம்

தண்ணீர் பாய்ச்ச ஆள் இல்லாமல்
தவித்து நிற்கின்றன தென்னைமரங்கள்....!

தெருவோர கடையில் இளநீரை பேரம்
பேசிகொண்டிருக்கிறார்
தென்னைத்தோப்பின் சொந்தகாரர்...!
*

தனித்து நிற்பதும் பேரழகு தான் என்பதை
உணர்த்திவிடுகிறது...!

மொட்டைமாடியின் வட்டநிலா...!

அறுவடைக்கு தானியம் எப்போது
விளைந்து வரும் என்று காத்திருந்த காலம்
போய்.....!

அடகு வைத்ததையாவது மீட்க
எப்போது மானியம் கையில் வரும் என்று
காத்துகொண்டிருக்கிறான் விவசாயி....!
*

## நானும் எதார்த்தவாதிதான்....?

சில சாந்தர்ப்பவாதிகளை சந்திக்கும்
முன்புவரை....!

- மணிபாரதி தங்கசுந்தர்

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.